முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அசுவினித்தேவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.02.2019, வெள்ளிக்கிழமை

1. **விதி வழியே துன்பம் என்று**
**வினையென அனுபவிக்கும் மானிடா**
**விதி வெல்ல வழி வகை உண்டென்று**
**வேலவன் சக்தியாக கலியுகத்தில்**

2. கலியுகத்தில் அறமாக அவதரித்து
கஷ்டம் நீக்கும் அரங்க ஞானியின்
அழியாமை ஞான வேலிக்குள் வர
அனைவருக்கும் நன்மை கூடும் எனக் கூறி

3. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
கூறிடுவேன் **விளம்பி கலை திங்கள்**
**இருபானை திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 25ம் நாள் 08.02.2019, வெள்ளிக்கிழமை)**
**இயம்பிடுவேன் அசுவினித்தேவர் யானும்**

4. யானும் மக்கள் துன்பம் அகல உரைப்பேன்
உயிர்க்கொலை தவிர்த்து வாழ்தல்
தானாக வினையை போக்கும்
தருமமதை செய்ய முனைந்தால்

5. முனைந்தாலே முன்னேற்றம் காணும்
முழுமைபட பாதுகாப்பு கண்டிட
இணையிலா ஞான சக்தியாக
ஏழாம் படை வீடு படைத்த அரங்கன்

6. அரங்கன் அருள் பார்வைக்கு வர
அருள் ஞான தீட்சை ஆசி பெற
வரங்களாக துணைகள் கூடி
வாழ்வில் இடைகண்டமல்லலில்லா

7. இல்லாத பாதுகாப்பு பலம்
இணையிலா நெடிய ஆயுளும்
வல்லமையான வாழ்வும் வளமும்
வசதியும் மேம்பாடுமான நிலை கூடி

8. கூடியே வாழும் காலமே
குறையிலா மகிழ்வும் அமைதியும்
தேடியே நல்லோர் மேலவர்கள்
துணை கூடி தருமம் குன்றாத

9. குன்றாத ஞானவாழ்வாக மாறி
குறைவில்லா ஞானிகள் பலம்
நன்றான துணையாகவும் மாறி
ஞாலமதில் ஞானப்பிறவி எனும்

10. எனும் உயர்கதி நிலை அடைவர்
இடரெனும் வினைகளை வென்று
ஞானதேசிகன் அருள்பலத்தால்
நம்பி வர உலக மக்களுக்கு

11. மக்களுக்கு பிணி சோடை இல்லை
மண்ணுலகில் பிறவி பிணி இல்லா
தேக்கமும் இல்லா பெருவாழ்வு பெறுவர்
தெரிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அசுவினித்தேவர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

விதிக்கப்பட்ட விதியின் வலிமையினால் துன்பங்களை அவரவர் செய்திட்ட வினையின் பயன்களாக அனுபவித்து துன்பத்தில் ஆழ்ந்துள்ள மனிதகுல சமுதாயமே உங்களது விதியையும் வென்று கடைத்தேறிட வழிவகை உண்டு என்று உலகோர் கடைத்தேறிட உபதேசித்து முருகப்பெருமானின் அவதாரமாக மகா சக்தி வடிவமாக இந்த மாமாயை சூழ் கலியுகத்தினில் அறத்தின் சக்தியாக அறத்தலைவனாக வள்ளல் ஞானியாக அவதரித்து மக்களின் கஷ்டங்களை போக்கி காக்கின்ற ஆறுமுக அரங்கமகா ஞானியரின் அழிவிலாமை எனும் சக்திமிக்க அறவேலிக்கும் உலகோர் அனைவரும் வந்து ஆசி பெற்றிட எல்லா நன்மைகளும் கைகூடும் என உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 25ம் நாள் 08.02.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே அசுவினித்தேவர் யானும் மக்களின் துன்பம் நீங்கிடவே நித்ய பிரசன்ன ஆசி நூலினை உரைக்கின்றேன் என்கிறார் மகான் அசுவினித்தேவர்.

உலக மக்களே நீங்கள் படுகின்ற துன்பம் விலக உபாயம் உரைக்கின்றேன் அசுவினித் தேவர் யானும். உலகோரே நீங்கள் உங்களது வாழ்வினில் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து வாழ்தல் அவசியமாகும். சுத்த சைவ உணவினை நீங்கள் மேற்கொண்டு ஒருபோதும் புலால் அருந்தாமல் வைராக்கியத்துடன் வாழ்ந்து வர உங்களது துன்பம் எல்லாம் தானாக விலகிவிடும்.

சக்திமிக்க தர்மத்தினை செய்ய முயற்சி செய்திட்டாலே உங்களது வாழ்வு முன்னேற்றமடையும் நீங்கள் உங்களது வாழ்வினில் முழுபாதுகாப்பை அடைய வேண்டுமென்றால் இந்த கலியுகத்தின் ஈடுஇணையற்ற சக்தியாக ஆற்றலுடன் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை படைத்திட்ட ஆறுமுக அரங்கமகா ஞானதேசிகனாரின் அருள் பார்வைக்குள் வந்திட வேண்டும். அரங்கனின் அருள்பார்வைக்குள் வந்திடவே அவரவரும் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகானின் திருவடிகளிலே பயபக்தி விசுவாசத்துடன் அர்ப்பணித்து பணிந்து அருள் ஞான தீட்சை உபதேசம் பெற்றிட வேண்டும். அரங்கனிடத்து தீட்சை உபதேசம் அடைந்திட அவரவரின் வாழ்வினில் அரங்கனின் வரங்களைப் பெற்று, வரங்களெல்லாம் அவர்களுக்கு துணை நிற்க வாழ்வின் உண்டாகும் இடைகண்டங்கள் எல்லாம் நீங்கி பாதுகாப்பும் ஆயுள் பலமும் பெற்று நீடிய ஆயுளை பெறுவார்கள். வல்லமையும் வளமும்மிக்க வாழ்வினை வாழ்வார்கள். அவர்களது வாழ்வினில் வசதிகளும் வளங்களும் பெருநிலை உயர்ந்து அமைதியாக மகிழ்வுமிக்க வாழ்வினை

வாழ்ந்து நல்லவர்களின் நட்பையும் ஞானிகள் துணையையும் பெற்று ஞானஅறிவையும் பெற்று குன்றாத ஞானவாழ்வாக வாழ்ந்து ஞானிகளின் அருள்பலம் பெருகி துணைவர உலகினில் ஞானப்பிறவி என்கிற உயர்ஞான கதியினை பெறுவார்கள் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் பலத்தாலும் வரத்தாலும்.

அரங்கனின் அருளினை நம்பி அரங்கமகா தேசிகனே முருகப்பெருமானின் அவதாரம் அரங்கனே கலியுக வாழும் ஞானி அரங்கனே யுகமாற்ற தலைவன் அரங்கனே இவ்வுலகின் ஒப்பற்ற ஒரே ஞானகுரு அரங்கனே சற்குரு அரங்கனே தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாமும் என முழு நம்பிக்கையோடு சந்தேகம் இன்றி அரங்கன் திருவடிகளே கதியென நம்பி அரங்கனைப் பின் தொடர்ந்திட்டால் தொடரும் அவர்களுக்கு நோய் இல்லை, குற்றங்களும் இல்லையப்பா. அவர்களுக்கு இனி இவ்வுலகினில் தொடர்ந்து வரும் பிறவிப் பெருந்துயரமும் இல்லையப்பா. பிறவிப்பிணி அறுத்து தடையின்றி மரணமிலாப் பெருவாழ்வையும் பெற்று சிறப்படைவார்களப்பா என அரங்கனின் ஆற்றலினை உலகோர் அறிய நித்ய பிரசன்ன ஆசி உரைக்கின்றார் மகான் அசுவினித்தேவர்.

–சுபம்–